1987 ஏப்ரல் 22] [திரு. சைதை சா. துரைசாமி]

மதிப்பீடும் அதிகமாகும். பொது மக்களும் அடையாறு ஆற்றில் வெள்ளம் வரும்போது அந்த அபாயத்திற்கு ஆட்படுவார்கள். எனவே அந்த மக்களை மாற்று இடத்தில் குடியமர்த்த. இந்தத் திட்டம் விரைந்து நடைபெற, தடையாணை வாங்கியிருக்கின்ற அறநிலையத் துறை, உடனடியாக அந்தத் தடையாணையை ரத்து செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனை ஒன்றுக்கு ரூ. 7,000 என்பது, விலை நிர்ணயம் செய்த அரசாணை எண். 337, நாள் 18—5—1981-படி கோயில் நிலங்களில் ஏற்கனவே ஆக்கிரமித்திருக்கின்ற நிலங்களைப் பொறுத்து, அந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்பே இல்லாத நிலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற பிரச்சினை இருக்கிறது. அந்த நிலப் பிரச்சனையில், மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த் துறை நிர்ணயிக்கிற விலைக்கு அறநிலையத் துறை ஒத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, ஒரு கூட்டு ஆலோசனைக் கூட்டம், குடிசைப் பகுதி மாற்று வாரியம், அறநிலையத் துறை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய கூட்டம் கூட்டப்பட்டு, அதற்கு ஒரு பரிகாரம் கண்டு, விரைவில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணை நிறைவேற்றப்பட்டு, அதற்கான தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

4. அரசினர் சட்ட முன்வடிவு.

கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. வரவுசெலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண். 1—நிலவரித் துறை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,12,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் சுமார் 10 ஆண்டுகளாக இயற்கை பாதிப்பால் குத்தகை விவசாயிகள் குத்தகை பாக்கிகளைத் திருப்பிச் செழித்த முடியாத நிலையில் உள்ளபோது ரெவின்யூ கோர்ட்களைத் திறந்து, நில வெளியேற்றம் செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 20,12,54,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பல்லடம் வட்டம், நல்லூர் கிராமம் பெரிச்சிபாளையம் க. ச. 736/1 ஏகி. 3.10 ஏக்கர் உபரி நிலத்தில் ஏழு ஆண்டு காலமாகக் குடியிருந்து வரும் 177 ஏழைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு பட்டா வழங்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 20,12,54,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".